



வரும் சட்டப்பேரவை பொதுத் தேர்தலையொட்டி கழக வேட்பாளர்களாகப் போட்டியிட ஏராளமான கழகத்தினர் திரண்டு வந்து, நேற்று முன்தினம் (20.2.2026) காலை அண்ணா அறிவாலயத்தில் தலைமைக் கழக நிர்வாகிகளிடம் விண்ணப்பங்களைப் பெற்ற காட்சி!

# சுயமரியாதை சீண்டப்பட்டால் – எதிர்த்துக் குரல் கொடுக்கும் முதல் ஆளாக நான் இருப்பேன்!

## பேரவையில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் நன்றி உரை!...

3ஆம் பக்கத் தொடர்ச்சி

இந்த நேரத்தில் நான் நினைவுகூர வேண்டியவர்கள், இந்தப் பேரவைக்கு நம் எல்லோருடனும் தேர்ந்தெடுக்கப்பட்டு, நம்முடன் பணியாற்றிய உறுப்பினர்கள் ஐந்து பேர் மறை வெய்திவிட்டார்கள். தம்பி திருமகன் ஈ.வெ.ரா, விழுப்புரம் புகழேந்தி, சகோதரர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன், அமுல் கந்தசாமி,

பொன்னுசாமி ஆகிய ஐவரையும் இந்த நேரத்தில் நினைவு கூர்ந்து அவர்களாற்றிய பணிகளுக்காக என்னுடைய நன்றிகளை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த 24.01.2026 அன்று இதே பேரவையில் நான் உரையாற்றும்போது குறிப்பிட்டதை இப்போது நான் நினைவுகூர்கிறேன்: “2021 ஆம் ஆண்டு நடைபெற்ற தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் 6வது முறையாக வெற்றி பெற்றபோது, ஒரு பக்கம் மகிழ்ச்சி இருந்தாலும், இன்னொரு பக்கம் எனக்குக் கவலையும் இருந்தது, அதை நான் மறைக்க விரும்பவில்லை. இந்தப் பொறுப்பை நான் எப்படி செய்யப் போகிறேன்? வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியுமா? மக்கள் விரும்பக்கூடிய வகையில் ஆட்சி நடத்த முடியுமா? மக்கள் மகிழ்ச்சி அடையும் வகையில் ஆட்சி நடத்த முடியுமா? என்ற கவலைதான் எனக்கு இருந்தது” என்று நான் சொல்லியிருந்தேன்.

**முந்தைய அரசின் மோசமான நிலை!**

**ஒன்றிய அரசின் ஓரவஞ்சனை!**

முந்தைய அரசுகளின் செயல்பாட்டின் காரணமாக விளைந்த மிக மோசமான பின்னடைவு; நமக்கு ஒத்துழைக்காத, ஓரவஞ்சனை செய்யக்கூடிய ஒன்றிய அரசு இரண்டுக்கும் இடையில்தான் நாம் இருந்தோம். நமக்குப் பெரும் வெற்றியைத் தந்து பொறுப்பை ஒப்படைத்த மக்களின் எதிர்பார்ப்புக்கு இடையில் ஆட்சிக்கு வந்தோம். தமிழ்நாட்டில் அனைத்துத் துறைகளும் எப்போது வளரும் என்ற ஏக்கத்தில் இருந்தவர்களுடைய வாட்டத்தைப் போக்கி, சமச்சீரான வளர்ச்சியை இந்த 5 ஆண்டுகளில் அடைந்திருக்கின்றோம். திராவிட மாடல் அரசு தீட்டிய திட்டங்களை, இயற்றிய சட்டங்களை மக்களின் முன் வைத்துள்ளோம். நிதிநிலைமை சீராக இல்லாத நேரத்திலும் அதனை ஒரு காரணமாகச் சொல்லிக் கொண்டு சும்மா இருக்காமல் நிறைய திட்டங்களைச் செயல்படுத்தி இருக்கிறோம்.

> **தலைமைப் பொறுப்பில் உள்ளோருக்கு பொறுமை, நிதானம், சகிப்புத் தன்மை, கால நேரம் பாராது உழைத்திடும் பண்பு, தீர்க்கமாக முடிவெடுக்கும் திறன், எதையும் தாங்கும் வல்லமை, எல்லோரிடத்திலும் அன்பு, கருணையோடு இருத்தல், கடமை தவறாமை, ஊக்கத்தோடு செயலாற்றுதல் ஆகிய பண்புகள் நிச்சயம் தேவை. இதனையே நானும் கடைப்பிடித்திருக்கிறேன். ஆராய்ந்து முடிவெடுக்கும் பண்பு அந்த முடிவினால் விளையும் பயன் - பயன் பெற்றவர்களின் உயர்வு உயர்வினால் உண்டாகும் வளம் வளத்தினால் விளைந்திடும் இன்பம் இன்பத்தால் கிடைத்திடும் நன்மை இதுவே நாம் இப்போது காணும் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு அடிப்படை. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நன்மையே மக்களுக்கு நம்பிக்கையைத் தந்து, நாளைய ஆட்சியாளர்களாக எங்களைத் தொடரச் செய்யப் போகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)**

திராவிட மாடல் அரசால், இந்த 5 ஆண்டுகளில் விடியல் பயணம், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், நான் முதல்வன் திட்டம், காலை உணவுத் திட்டம், புதுமைப் பெண் திட்டம், அரசு ஊழியர்களுக்கான உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம், இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் 48, 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட திருக்கோயில்கள் குடமுழுக்கு, குழந்தைகள் முதல் முதியோர் வரை, ஆரம்பக் கல்வி முதல் ஆராய்ச்சிக் கல்வி வரை, இளைஞர்கள், பெண்கள், விவசாயிகள், நெசவாளர்கள், விளிம்பு நிலையில் உள்ள ஆதிதிராவிட, பழங்குடியின மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள், மாற்றுத்திறனாளிகள், திருநர்கள் என அனைத்துச் சமுதாயத்தினரும் வாழ்வில் உயர்வு கண்டிட எண்ணற்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டதை நான் எண்ணிப் பார்க்கிறேன்.

> **மக்கள் பணியானாலும் சரி; வந்த, வருகின்ற தேர்தல் பணிகளானாலும் சரி; என்னில் ஒரு பாதியாய், இயக்கத்தின் வளர்ச்சிக்கும், ஆட்சியின் சிறப்பிற்கும் உறுதுணையாக நிற்கும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய பாராட்டுகள், நன்றிகள். (மேசையைத் தட்டும் ஒலி)**

(மேசையைத் தட்டும் ஒலி)

இதற்கெல்லாம் நான் மட்டுமா காரணம்? இல்லை! இல்லவே இல்லை! ஒட்டுமொத்த தமிழர்களும் என் கையோடு கைசேர்த்து, எனக்கு ஆக்கத்தையும் ஊக்கத்தையும் வழங்கி, பல்வேறு நலத் திட்டங்களை நடைமுறைப்படுத்தக்கூடிய வாய்ப்பையும், வலிமையையும் தந்து எனக்கு உதவினார்கள்.

**நாளை தமிழ்நாடு நிச்சயம்**

**நெஞ்சில் தாங்கி நம்மை வரவேற்கும்!**

நான் இந்த ஐந்தாண்டு காலத்தில் எனக்கும், என் மனசாட்சிக்கும் மட்டுமே கட்டுப்பட்டு உழைத்திருக்கின்றேன். இன்னும் உழைக்கக் காத்திருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) நாளைய தமிழ்நாடு நிச்சயம் நெஞ்சில் தாங்கி நம்மை வரவேற்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. நாளை நாங்கள் அமைக்கப் போகக்கூடிய திராவிட மாடல் 2.0 ஆட்சி, எங்கள் சாதனைகளை நாங்களே விஞ்சும் அளவிற்கு இருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

**கழக உடன் பிறப்புகள் திசை நோக்கி வணங்குகிறேன்!**

திராவிட முன்னேற்றக் கழகம் என்ற மாபெரும் இயக்கத்தின் தலைவராக அமர வைத்து, தமிழ்நாட்டின் முதலமைச்சராக உழைத்த நான், இலட்சக்கணக்கான கழக உடன்பிறப்புகள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எவரேனும் விடுபட்டிருந்தால், அவர்களையும் இணைத்துக்கொண்டு, அனைவருக்கும் மீண்டும் ஒரு முறை நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உறுதியாகச் சொல்கிறேன். மீண்டும் வெல்வோம். மீண்டும் வந்து ஆட்சி அமைப்போம். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) மீண்டும் வந்து தமிழ் மக்களுக்கான திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்துவோம்.

நன்றி! வணக்கம்! (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

### தேர்தல் பணியைப் பார்த்து பொறாமைப்பட்டு அமைச்சர் கே.என்.நேரு மீது வழக்கு!

# பொய் வழக்கை சட்டரீதியாக எதிர்கொண்டு தி.மு.க. முறியடிக்கும்!


## கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பேட்டி!

**சென்னை, பிப்.22– அமைச்சர் கே.என்.நேருவின் தேர்தல் பணியைப் பார்த்துப் பொறாமைப்பட்டு பொய் வழக்கு போடப்பட்டுள்ளது. அந்த பொய் வழக்கைச் சட்டரீதியாக எதிர்கொண்டு தி.மு.க. முறியடிக்கும்! என்று கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி நேற்று முன்தினம் (20.2.2026) சென்னை அண்ணா அறிவாலயத்தில் செய்தியாளர்களைச் சந்தித்தது பேட்டியளித்தார்.**

கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தெரிவித்ததாவது: –

அமைச்சர் கே.என். நேரு அவர்கள் மீது சிபிஐ விசாரணை நடந்துகொண்டிருந்த போது, அமலாக்கத்துறை சில ஆவணங்களை எடுத்ததாகச் சொல்கிறார்கள். இதனைத் தொடர்ந்து அமைச்சர் அவர்கள் சிபிஐ வழக்கை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார். அந்த முக்கிய வழக்கை உயர்நீதிமன்றம் ரத்து செய்தது. சிபிஐ வழக்கு ரத்து செய்யப்பட்டதால் அமலாக்கத்துறையிடம் போதிய ஆதாரங்கள் இல்லை என்றாலும் அவர்கள் தமிழ்நாடு அரசை நடவடிக்கை எடுக்கக் கேட்டுக் கொண்டனர்.

முதலமைச்சர் அவர்கள், கே.என். நேரு அவர்களைக் கட்சியின் மூத்த தலைவர் என்றோ கழகத்தின் முதன்மைச் செயலாளர் என்றோ கூடப் பார்க்காமல் உடனடியாக லஞ்ச ஒழிப்புத் துறை மூலம் விரிவான விசாரணைக்கு உத்தரவிட்டார். தற்போது அந்த விசாரணை நடைபெற்று வருகிறது.



அ.தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் இன்பதுரை தொடர்ந்த வழக்கை விசாரித்த சென்னை உயர்நீதிமன்றம், தமிழ்நாடு அரசு ஏற்கனவே விசாரணை நடத்திக் கொண்டிருப்பதைக் கருத்தில் கொண்டு, முதல் தகவல் அறிக்கையைப் பதிவு செய்ய உத்தரவிட்டுள்ளது. இது ஒன்றும் பின்னடைவு அல்ல, திமுகவின் சட்டத்துறை இதனைச் சட்டரீதியாகச் சந்தித்து முறியடிக்கத் தயாராக இருக்கிறது.

அமைச்சர் கே.என்.நேரு அவர்கள் மீது முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா பல வழக்குகளை தொடுத்திருக்கிறார். அத்தனை வழக்குகளையும் எதிர்கொண்டு வென்று காட்டியவர் தான் கழக முதன்மைச் செயலாளர்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

பின்னர் செய்தியாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்தார்:

பா.ஜ.க. அரசு சிபிஐ மற்றும் அமலாக்கத்துறையை அரசியல் ரீதியாகப் பயன்படுத்தப்படுகிறது. முன்னாள் ஒன்றிய அமைச்சர் ப.சிதம்பரம் அவர்களை நள்ளிரவில் கைது செய்து 100 நாட்கள் சிறையில் வைத்தும், மூன்று ஆண்டுகள் ஆகியும் அந்த வழக்கில் எந்த முன்னேற்றமும் இல்லை. கடந்த 2016-ல் லாரிகளில் பிடிபட்ட 570 கோடி ரூபாய் வழக்கில் 10 ஆண்டுகள் ஆகியும் சிபிஐ இதுவரை முதல் தகவல் அறிக்கையைக் கூடப் பதிவு செய்யவில்லை. இவை அனைத்தும் தேர்தல் நேரத்தில் முதலமைச்சர் மற்றும் தி.மு.க.வின் இமேஜைக் கெடுப்பதற்காகச் செய்யப்படும் சூழ்ச்சிகள்.

அமைச்சர் நேரு தற்போது 41 தொகுதிகளுக்குப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். அவரது தேர்தல் பணியைப் பார்த்துப் பொறாமைப்பட்டு எடப்பாடி பழனிசாமியின் ஆலோசனையின் பேரில் டெல்லியில் இருப்பவர்கள் இத்தகைய நடவடிக்கைகளை எடுக்கிறார்கள். ஆனால் அமைச்சர் அவர்கள் இத்தகைய அச்சுறுத்தல்களுக்குப் பயப்பட மாட்டார்; தட்டத் தட்டப் பந்து எழும்புவது போல இன்னும் தீவிரமாகப் பணியாற்றுவார்.

இவ்வாறு கழக அமைப்புச் செயலாளர் தெரிவித்தார்.

### குமரமங்கலம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் நடனப் பயிற்சியின் போது

# மயங்கி விழுந்து உயிரிழந்த சிறுமியின் பெற்றோருக்கு ஆறுதல் - நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, பிப். 22 - நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், குமரமங்கலம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியின் நூற்றாண்டு விழா நடனப் பயிற்சியின்போது மயங்கி விழுந்து உயிரிழந்த சிறுமியின் பெற்றோருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவியை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், குமரமங்கலம் கிராமம், கவுண்டபாளையம் குடித்தெருவில் வசிக்கும் மாதேஸ்வரன் - தனலட்சுமி தம்பதியரின் மகள் செல்வி. ரக்ஷிதா (வயது 8) குமரமங்கலம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் மூன்றாம் வகுப்பு பயின்றுவந்த நிலையில் கடந்த 08.02.2026 அன்று மறுநாள் நடக்கவிருந்த பள்ளியின் நூற்றாண்டு விழாவிற்காக நடைபெற்ற நடனப் பயிற்சியில் எதிர்பாராதவிதமாக மயங்கி விழுந்து, நாமக்கல் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு, 9.2.2026 பிற்பகல் 1.50 மணியளவில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகவும் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

இச்சம்பவத்தில் உயிரிழந்த சிறுமியின் பெற்றோருக்கும், அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்த சிறுமியின் பெற்றோருக்கு மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

## தி.மு.க. இளைஞர் அணி

### அறிவிப்பு!

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் கே.மணிகண்டன் (3/28, சுந்தரவிநாயகர் கோயில் தெரு, சின்ன நத்தம், செங்கல்பட்டு) அவர்கள் வகித்துவரும் அப்பொறுப்பில் இருந்து விடுவிக்கப்படுகிறார்.

**அன்பகம்**
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 20.02.2026

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி